**செய்தி வெளியீடு எண் : 1274** **நாள் : 28.07.2022**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் இன்று (28.7.2022) மாலை சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் 44-வது சர்வதேச சதுரங்கப் போட்டியினை தொடங்கி வைக்க உள்ளார்கள். இத்தொடக்க விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு பல்வேறு மாநில முதலமைச்சர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று அழைப்பிதழ் வழங்கினார்கள்.

மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள், மாண்புமிகு அருணாச்சல பிரதேச முதலமைச்சர் திரு. பெமா காண்டு அவர்கள், மாண்புமிகு சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமாங் அவர்கள் ஆகியோர் இச்சர்வதேச சதுரங்க போட்டி சிறப்பாக நடைபெற தங்களது வாழ்த்துகளை தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளனர். மேலும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு சர்வதேச சதுரங்க போட்டி சிறப்பாக நடைபெற தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

மாண்புமிகு மத்திய பிரதேச முதலமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சவுகான் அவர்கள், மாண்புமிகு தெலுங்கானா மாநில முதலமைச்சர் திரு.சந்திரசேகர் ராவ் அவர்கள், மாண்புமிகு ஹரியானா மாநில முதலமைச்சர் திரு. மனோகர் லால் அவர்கள் ஆகியோர் சமூக வலைத்தளங்கள் மூலம் இச்சர்வதேச சதுரங்க போட்டி சிறப்பாக நடைபெற தங்களது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in